# நெசவுக் கலையைப் பற்றி அறிந்து கொள்ளவும்

நெசவு என்பது வங்காளதேசத்தில் ஒரு முக்கியமானதும் மரியாதைக்குரியதுமான கைத்தொழில் ஆகும்.
சில்ஹெட் நகரத்தில், 'ஷிட்டால் பட்டி' எனப்படும் பாரம்பரிய பாய் நெசவு உள்ளது.
டாக்காவில் உருவான 'ஜம்தானி' எனப்படும் கையால் நெய்யப்பட்ட ஜவுளி (textile) நெசவு உள்ளது.
இரண்டு தொழில்களும் ஐக்கிய நாடுகள் சபையால் அருவமான கலாச்சார பாரம்பரியமாக (ICH) அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
வீட்டில் கிடைக்கும் பொருட்களைப் பயன்படுத்தி உங்கள் கைகளால் நெசவு செய்ய முயற்சி செய்யவும்!

உங்களுக்கு தேவையானது: கட்டுமான காகிதம், ஒரு அளவு கோல், ஒரு பென்சில், ஒரு கத்தரிக்கோல் மற்றும் பசை.

1. கட்டுமான காகிதத்தை பாதியாக மடியுங்கள்.



2. 2 cm இடைவெளி கொண்ட நேர் கோடுகளை மடிப்பில் இருந்து தொடங்கி போடவும்



3. இந்த கோடுகள் நெடுகிலும் வெட்டவும் (ஆனால் கடைசிவரை இல்லை!)



4.வெவ்வேறு வண்ணங்களில் இன்னும் இரண்டு காகிதங்களை பயன்படுத்தி 2 cm அகலமுள்ள கீற்றுகளாக வெட்டவும்



5. மடித்த காகிதத்தைத் திறக்கவும். அதில் உள்ள பிளவுகளில் காகித கீற்றுகளை மேலும் கீழுமாக செலுத்தவும்.



6. எந்த இடைவெளியும் இல்லாத வரை அனைத்து கீற்றுகளையும் நெய்யவும். நீட்டிக்கொண்டிருக்கும் அதிகப்படியான காகிதக்கீற்றை கீழே மடித்து பின்னால் ஒட்டவும்.



வெவ்வேறு மாதிரிகளுடன் பரிசோதனை செய்யுங்கள்! மேலும் உத்வேகத்திற்காக QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

1 எஸ்பிளனேட் டிரைவ், சிங்கப்பூர் 038981 | வாடிக்கையாளர் அனுபவ ஹாட்லைன்: 6828 8377

இந்தப் பொருளின் எந்தப் பகுதியும் எஸ்பிளனேட் கோ லிட். (Esplanade Co Ltd.)-இன் அனுமதியின்றி வேறு எந்த வடிவத்திலும் மீளுருவாக்கம் செய்யப்படக்கூடாது.

esplanade
theatres on the bay
singapore

எஸ்பிளனேட் என்பது ஒரு இலாப நோக்கற்ற தொண்டு நிறுவனமாகும். பின்தங்கியவர்கள் உட்பட பல்வேறு சமூகங்களுக்கு கலையின் மகிழ்ச்சியையும் உத்வேகத்தையும் கொண்டு வர எங்களுக்கு உதவுங்கள்.

www.esplanade.com | EsplanadeSG | EsplanadeSingapore #esplanade #mydurian